**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.1 | |
| **Name:** | குமார் | **Caste** |
| **Father's Name** | சண்முகசுந்தரம் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 40 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20-06-2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் சாத்தியடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது அக்காவின் கணவர் சௌந்தர்ராஜன் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் 16-08-2015 அன்று சுமார் மதியம் 2 மணியளவில் ஆவுடையார்கோவில் டு கோட்டைப்பட்டிணம் சாலையில் உள்ள மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் அருகே சென்று கொண்டு இருந்தார். நான் அவரை தொடர்ந்து 50 அடி இடைவெளியில் நானும் எனது நண்பர் பட்டியல் சாட்சி இளங்கோ பின் எங்களுடை ய இருசக்கர வாகனம் தொடர்ந்து சென்றோம். அப்போது இறந்து போன சொளந்தர்ராஜன் இடது ஓரமாக சென்று கொண்டு இருந்தார். எதிர் திசையில் கோட்டைப்பட்டிணம் டு ஆவுடையார்கோவில் வந்து கொண்டு இருந்த இருசக்கர வாகனத்தில் இருவர் வந்தனர். அவர்கள் மிகவும் வேகமாக கவனக்குறைவாகவும் வந்தனர். நான் மோதப்போரங்கன்னு சத்தம் போட்டோம். ஆனாலும் வேகமாக வந்த இருசக்கர வாகனம் ஏறிவந்து மோதிவிட்டது. அப்போது விழுந்த கிடந்த சௌந்தர்ராஜன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். அவருக்கு தலையிலும் நெற்றிப் பொட்டிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. எதிரில் வந்த இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த வாகனத்தை ஓட்டி வந்த நபருக்கு கையில் அடிப்பட்டது. அதில் பின்புறம் அமர்ந்து வந்த நபருக்கு கன்னத்துக்கு கீழ் காயம் ஏற்பட்டது. முதலில் ஆவுடையார்கோவில் காவலர்கள் வந்து விசாரணை செய்து விட்டு தங்களுடைய ஆள்வரைக்குள் இல்லையென சென்று விட்டனர். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து நாகுடி போலிசார் வந்தனர். விசாரணை செய்த பின்பு ஆம்புலன்ஸ்சில் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்குச் கொண்டு சென்றனர். மறு நாள்**

நாகுடி காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் வந்து விசாரணை செய்தார். அன்றையதினமே பிரேத பரிசோதனை செய்து ஒப்படைத்தனர். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபர்களின் பெயர்கள் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. பார்த்தால் அடையாளம் சொல்லுவேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள். நான் தான் எழுத்து மூலமான புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்தப் புகார் ஆனது அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்தவர் எனக்கு என்ன முறை என்றால் எனது அக்கா கணவர். இறந்த சௌந்தர்ராஜனுக்கு இருசக்கர வாகனத்திற்கான ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. விபத்து நடந்த சமயம் பேருந்து நிலையம் அருகே எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை. சம்பவம் நடந்த பின்பு போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் ஒரு மணி நேரம் கழித்து வந்தார்கள். அ.சா.ஆ. 1 புகாரினை யார் எழுதியது என்றால் பட்டியல் சாட்சி 3 இளங்கோவன் நான் கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்த போது எவ்வளவு அடி தூரத்தில் இருந்தேன் என்றால் 20 அடி தூரத்தில் இருந்தேன். சம்பவத்தை ஏற்படுத்திய நபருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நாங்கள் தான் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நானும் சௌந்தர்ராஜனும் மிதமான வேகத்தில் தான் சென்று கொண்டு இருந்தோம் என்றால் சரிதான். எதிரி வாகனம் எவ்வாறு வந்தது என்றால் மிகவும் வேகமாக வந்தது. சௌந்தர்ராஜனுக்கு இழப்பீடு கோரி புதுக்கோட்டை மாண்புமிகு முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்றால் சரிதான் . இழப்பீடு வேண்டும் என்பதற்காக எதிரிமீது பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகன்த்தினை ஓட்டிவந்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சௌந்தர்ராஜன் வேகமாக வாகனத்தை ஓட்டி வந்ததால் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. எதிரி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தினை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தவில்லையென்றால் சரியல்ல. எதிரி முறையான வாகன உரிமம் பெற்று சரியான முறையில் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.2 | |
| **Name:** | இளங்கோவன் | **Caste** |
| **Father's Name** | செல்லத்துரை | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 44 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20-06-2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் சாத்தியடி கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்தவர் பெயர் சொளந்தர்ராஜன், அ.சா.1. ஐ தெரியும். 16-08-2015 அன்று எனது அக்கா சந்திரா மகள் திருமணத்திற்கு பத்திரிக்கை வைப்பதற்காகச் சென்றோம். நானும் அ.சா.1ம் ஒரு இருசக்கர வாகனத்திலும் , இறந்த சொந்தர்ராஜன் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்று கொண்டு இருந்தோம். ஆவுடையார்கோவில் டு கோட்டைப்பட்டிணம் சாலையில் எங்களுக்கு முன்னர் 50 அடி தூரத்தில் சென்று கொண்டு இருந்தார். மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் அருகே இடது ஓரமாக சென்று கொண்டு இருக்கும் போது கிழக்கிலிருந்து ஆவுடையார்கோவில் நோக்கி வந்து கொண்டு இருந்த இருசக்கர வாகனம் அ திவேகமாகவும் கவனக்குறைவாகவும் கன்ரோல் இல்லாமல் வந்தது. அப்போது எதிரே வந்த இருசக்கர வாகனம் அவருக்கு இடது புறம் செல்லாமல் ஏறி சொளந்தர்ராஜனின் இருசக்கர வாகனத்தில் வலது பக்கம் வந்து மோதிவிட்டது. சொளந்தர்ராஜனுக்கு பின் மண்டையிலும் நெற்றிப் பொட்டிலும் அடிப்பட்டு இருந்தது. சம்பவ இடத்திலேயே அவர் இறந்து விட்டார். ஆவுடையார்கோவில் போலிசார் வந்தனர். விசாரணை செய்துவிட்டு நாகுடி காவல் நிலையத்தில் புகார் அளிக்கக் கூறினார். எதிரே வந்த மேகநாதன் வாகனத்தை ஓட்டி வந்தவருக்கு கையில் அடிப்பட்டு இருந்தது. அவருக்குப் பின்னர் உட்கார்ந்து நேராஜிக்கு கண்ணில் அடிப்பட்டு இருந்தது. இருவரும் Splender Plus TN 63 J 7045 வாவனத்தில் வந்தனர். வாகனத்தை**

மோதிய இருநபர்கள் ஆ ம்புலன்ஸ்சில் ஏறி சிகிச்சைக்குச் சென்றனர். சௌந்தர்ராஜனை கூட்டிச் செல்வதற்கு வாகனம் வரும்வரை நானும் குமாரும் காத்திருந்து 1/2 மணி நேரம் கழித்து அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு சென்றோம். நாகுடி போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்தனர். என்னையும் விசாரணை செய்தனர். அ.சா.ஆ. 1 புகாரினை எழுதியது நான். கையொப்பம் இட்டது குமார். போலிசார் என்னை சம்பவம் தொடர்பாக விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

. இறந்த சௌந்தர்ராஜன் எனக்கு மச்சான். மாவடிக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து எங்கள் ஊரான சாத்தியடி எவ்வளவு தூரம் என்றால் 4, 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவத்தின் போது திருமணப்பத்திரிக்கை கொடுப்பதற்காக சென்றோம் என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேமா என்றால் கூறியுள்ளோம். பத்திரிக்கையினை ஆவணமாக கொடுக்கவில்லை. வாய் மொழியாக கூறினோம். மாவடிக்கோட்டை பேருந்து நிலையத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் நான் பேருந்து நிலையத்தை கவனிக்கவில்லை. நான் வந்த துாரத்திலிருந்து மாவடிக்கோட்டை பேருந்து நிலையம் எத்தனை அடி இருக்கும் என்றால் 80 அடி துாரம் இருக்கும். 80 அடி துாரத்தில் என்ன இருக்கும் என்று கண் பார்வை காணமுடியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது 50 அடி துாரத்தில் நடந்தது. இழப்பீடு கோரி வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்றால் சரிதான். நான் அதில் சாட்சி அல்ல. இறந்த சௌந்தர்ராஜனுக்கு இருசக்கர வாகன ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் எனக்குத் தெரியவில்லை. எதிரிக்கு ஒட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் எனக்குத் தெரியாது. பட்டியல் சாட்சி அசா.1. முதல் அ.சா. 4 வரை உள்ளவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா. 1 முதல் 3 வரை நாங்கள் ஒரே சமுகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதினேன். நாகுடி காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினேன். புகாரினை யார் எழுதினார்கள் என்றால் நான் தான்நடந்த சம்பவத்தினை வைத்து எழுதினேன். எதிரி விபத்தினை ஏற்படுத்தவிலலையென்றாலும் சௌந்தர்ராஜன் தான் விபத்திற்கு காரணம் என்றாலும் விபத்திற்கு இழப்பீடு வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை

நீதிமன்ற அனுமதியுடன் 50 அடி துாரத்தில் சம்பவம் நடைபெறும் போது தெரியும் என்றால் சரிதான்.

மறு குறுக்கு விசாரணை

அ.சா.ஆ.1. ல் மதியம் 1.30 மணிக்கு மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் அருகே போய்க் கொண்டு இருந்த போது சம்பவம் நடைபெற்றதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.3 | |
| **Name:** | சந்திரா | **Caste** |
| **Father's Name** | க/பெ, சௌந்தர்ராஜன் | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 45 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20-06-2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் சாத்தியடி கிராமத்தில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்தது எனது கணவர். அ.சா.1. அ.சா.2. னை எனக்குத் தெரியும். கடந்த 16-08-2015 அன்று எனது மகளின் திருமணத்திற்காக பத்திரிக்கை கொடுப்பதற்காக எனது கணவர் , அ.சா.1, அசா.2. வுடன் சென்றார் . பத்திரிக்கை கொடுத்த பின்பு அனைவரும் ஆவுடையார்கோவில் வந்தனர். பின்பு அவர் ஆவுடையார்கோவிலில் இருந்து கோட்டைப்பட்டிணம் செல்வதாக என்னிடம் தொலைபேசியில் கூறினார். அ.சா.1 எனது கணவருக்கு அடிப்பட்டு விட்டதாக எனக்கு தகவல் கூறினார். அப்போது மதியம் 1.30 மணிபோல் இருக்கும். விபத்து நடந்த இடம் மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப்புக்கு அருகில் தான் . பிறகு நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். 1/2 மணி நேரத்தில் சென்று விட்டேன் . வந்த பிறகு தான் இறந்த விபரம் எனக்குத் தெரியும். தலையில் , நெற்றிப் பொட்டில் காயம் இரண்டு பைக் மோதி விபத்து என்று கூறினார்கள். ஆம்புலன்ஸ்சில் ஏறி நானும் அ.சா.1 ம் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை பிரேத பரிசோதனைக்காக கொண்டு சென்றோம். மறு நாள் உடலினை கொடுத்தார்கள். விபத்தினை ஏற்படுத்தியது மேகநாதன் என கேட்டு தெரிந்து கொண்டேன். அவருடன் பின்னர் உட்கார்ந்து வந்தவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை . ஆனால் மேகநாதன் அக்கா மகன் ஆவார். நான் வருவதற்கு முன்பே மேகநாதனும் மற்றொருவரும் மருத்துவமனைக்குச் சென்று விட்டனர். அ.சா.1. அ.சா.2. தான் புகார் அளிக்கச் சென்றனர். நாகுடி போலிசார் வந்தனர். விசாரணை செய்தனர்.**

**குறுக்கு விசாரணை**

**எனது கணவர் இருசக்கர வாகனம் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளாரா என்று**

**எனக்குத் தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் 1/2 மணி நேரத்தில் வந்து விட்டேன். இழப்பீடு கோரி நான் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கேள்விப்பட்டது போல எதிரி அதிவேகமாகவும் , கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தவில்லையென்றால் சரியல்ல.**

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.4 | |
| **Name:** | பாரதி | **Caste** |
| **Father's Name** | சன்னாசி | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 30 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20-06-2022**
**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் மாவடிக்கோட்டையில் வசித்து வருகிறேன். இறந்தவர் பெயர் சொளந்தர்ராஜன். அவரை எனக்குத் தெரியாது. இறந்தவர் ஆ வுடையார்கோவிலில் இருந்து கோட்டைப்பட்டிணத்திற்கு வந்து கொண்டு இருந்தார். எதிர்புறமாக வந்த இருசக்கர வாகனம் மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் அருகில் வந்த போது இருவரும் நேருக்கு நேராக மோதிக் கொண்டதாக தெரியவந்தது. சம்பவ இடத்திலேயே சொளந்தர்ராஜன் இறந்து விட்டார். எதிரே வந்தவர்கள் ஆம்புலன்ஸ்சில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். சம்பவம் கேள்விப்பட்டு முதல்லில் ஆவுடையார்கோவில் காவலர்கள் வந்து அவர்களுடைய ஆள்வரைக்குள் இல்லையென்பதால் நாகுடி போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தை நான் கேள்விப்பட்டேன். நேரில் நான் பார்க்கவில்லை.**

**குறுக்கு விசாரணை**

**நான் சம்பவம் நடைபெற்று எவ்வளவு நேரத்தில் கேள்விப்பட்டேன் என்றால் 1/2 மணி நேரத்தில் .**

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.5 | |
| **Name:** | நேதாஜி | **Caste** |
| **Father's Name** | கருப்பையா | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 24 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20-06-2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் வெள்ளாலவயலில் வசித்து வருகிறேன். நான் சுய தொழில் செய்து வருகிறேன். நானும் மேகநாதனும் 16-08-2015 கோட்டைப்பட்டிணத்திலிருந்து ஆவுடையார்கோவில் நோக்கி வந்து கொண்டு இருந்தோம். அப்போது சுமார் 1.30 மணி இருக்கும். மாவடிக்கோட்டை பிள்ளையார் சிலை, குளம் அருகே வந்து கொண்டு இருந்த போது எனக்கு எதிரே வந்த வண்டி வேகமாக வந்தது. நாங்கள் மெதுவாகத்தான் சென்றோம். வண்டியை ஓட்டியது எனது மாமா மேகநாதன். அவருக்கு சுமார் 40 வயது இருக்கும். வாகனத்தை எதிரே ஓட்டி வந்த நபருக்கு 55 வயது இருக்கும். விபத்தில் மேகநாதனுக்கு இடது கையில் , வாயில் அடிப்பட்டது. தலையில் அடிப்பட்டது. எனது வலது கண் புறுவத்தின் அருகில் அடிப்பட்டது. எதிரி ரே வந்தவருக்கு எங்கு அடிப்பட்டது என நான் பார்க்கவில்லை. ஆனால் இறந்து விட்டார். நாங்கள் சென்ற வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த இடத்தில் ஒரு பிள்ளையார்கோவில் உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு அருகில் உள்ள சாலை பாண்டிப்பத்திரம் சாலையின் ஆரம்பம். நாங்கள் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று விட்டோம். நாகுடி போலிசார் எங்களை விசாரணை செய்தார்கள்.**

**குறுக்கு விசாரணை**

**எதிரி மேகநாதனுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுனர் உரிமம் உள்ளது. நாங்கள் இடது ஓரமாகத்தான் வந்தோம் . மேகநாதனுக்கு எதிரே வந்த வாகனம் வலது புறமாக வந்தது.**

மேகநாதன் வண்டியினை எவ்வாறு ஓட்டி வந்தார் என்பதை மிக வேகாக தான் ஓட்டி வந்தார். சௌந்தர்ராஜன் ஓட்டி வந்த வாகனம் 70 லிருந்து 80 கிலோ மீட்டர் வேகத்தில் வந்தது. சௌந்தர்ராஜன் ஓட்டிவந்த வாகனம் அதிவேகமாக வந்து எங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. எதிரி தான் வாகனத்தினை வேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.6 | |
| **Name:** | ரஞ்சித் | **Caste** |
| **Father's Name** | சோனமுத்து | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 24 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 20-06-2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**நான் மாவடிக்கோட்டையில் வசித்து வருகிறேன். எனது வீடு விபத்து சம்பவம் நடந்த இடத்திலிருந்து 10 வீடு தள்ளி இருக்கு. விபத்து நடந்த இடத்தினை மாவடிக்கோட்டை பஸ்ஸ்டாப் என்று கூறுவார்கள். விபத்து நடந்த இடம் பாண்டிப்பத்திர சாலை செல்லும் ஆரம்ப சாலை என்றால் சரிதான். அந்த சந்திப்பு தான் கோட்டைப்பட்டிணம் ஆவுடையார்கோவில் செல்லும் சந்திப்பு என்றால் சரிதான். அதன் அருகில் பிள்ளையார்கோவில் உள்ளது என்றால் சரிதான். 16-08-2015 அன்று மதியம் சுமார் 1.30 மணி போல் நான் விபத்து நடந்ததை கேள்விப்பட்டு அங்கு சென்று பார்த்தேன். ஆவுடையார்கோவிலில் இருந்து கோட்டைப்பட்டிணத்திற்கு சொளந்தர்ராஜன் சென்றார். எதிர்புறமாக மேகநாதன் என்பவர் வந்தார். மேகநாதன் வந்த இருசக்கர வாகனம் மோதி சொளந்தர்ராஜன் சம்பவ இடத்திலேயே இறந்தார். மேகநாதனும் அவருடன் வந்த நபரும் அடிப்பட்டதால் மயங்கிய நிலையில் இருந்தனர். நான் சம்பவ இடத்தினை பார்த்தேன். ஆவுடையார்கோவில் போலீஸ் வந்து அவர்கள் இல்லையென்பதால் நாகுடி போலிசார் வந்து விசாரணை செய்தார்கள்.**

**குறுக்கு விசாரணை**

**நான் கேள்விப்பட்டது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென்றால் சரியல்ல.**